
சின்மயா நகர்

# குழந்தை இயேசு

## பங்கு செய்தி மடல்

மலர் 1 ஜனவரி - மார்ச் 2023 இதழ் 2



# பங்குத்திருவிழா - 2023












## பங்குத் தந்தையிடமிருந்து ...



அன்புக்குரிய பங்கு மக்களுக்கு,

- புதிய 2023-ஆம் ஆண்டின், முதல் காலாண்டின் முடிவு நோக்கி விரைந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். ***இந்த பிப்ரவரி மாதத்தின் 22 ஆம் நாளில்,*** வழிபாட்டு ஆண்டின் இன்னொரு சிறப்பு காலத்தை தொடங்க இருக்கின்றோம். திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்பின் காலம், திருக்குடும்ப விழா - எனும் வரிசையில், ஆண்டவரின் திருமுழுக்கு விழாவோடு முதல் சிறப்பு காலம் முடிவுற்றது.

- இந்த சிறப்புக் காலத்தில், தவக்கால 40 நாட்கள், புனித வார 7 நாட்கள், உயிர்ப்பு பெருவிழாவை தொடர்ந்து விண்ணேற்பு விழா வரை நாற்பது நாட்கள், அடுத்த 10 நாட்களில் சிறப்பிக்கும் தூய ஆவியின் விழா (பெந்தகோஸ்தே விழா) வரைக்குமான நீண்ட வழிபாட்டு பயணம் - ஏறக்குறை 100 நாட்கள் எதிர் வருகின்றது.

- இடையில், கடந்த ஜனவரி திங்கள், 6 ஆம் நாள் முதல் 15 ஆம் நாள் வரை, இறைதந்தையின் அன்பு மகனாய், இறை திருவுளத்திற்கு தன்னைப் பணித்து, குழந்தையாய் பிறந்த - நமது பங்கின் பாதுகாவலரான குழந்தை இயேசுவின் திருவிழாவிற்கு - நவநாட்களில் நம்மை தயாரித்துக் கொண்டாடி மகிழ்ந்தோம். இறைவனது கருணையினால் இந்த நாட்களில், தகுந்த தயாரிப்பும், நம்பிக்கையும் கொண்டு எதிர்பார்த்தோர் நலன்களை பெற்றுள்ளோம்.

- ***இப்போது தொடங்கும் தவக்காலம் சோகமான முகத்துடன் போலி முகமூடி அணிந்து வலம் வரும் காலம் அல்ல.*** மாறாக, நாம் எவ்வளவு இறை வார்த்தையை அறிந்திருக்கின்றோம், இறைவார்த்தையை நம்புகின்றோம், இறைவார்த்தையை வாழ்வாக மாற்றுகின்றோம் என ஆய்ந்து பார்த்து, ***இறுதிக் காலங்கள் நெருங்கி வருகின்றதை உணர்ந்து, உயிர்ப்பு நோக்கி பயணம் செய்யும் அருள் காலம்.***

- விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம், "இனிமேல் பாவம் செய்யாதே போ" (யோவான் 8:11) என உயிர் பிச்சையும் உள்ள மாற்றத்தையும் அளித்த இறைவனின் விருப்பம், இறைவனது இதயத்தை குத்தி திறக்கின்ற, நமது வெளி வேடங்களையும் பரிசேயத்தனமான வாழ்வையும் களைந்து நாமும் இணைந்து புதிதாய் உயிர்ப்பதே.

***உங்கள் அனைவருக்கும்***

***எனது உயிர்ப்பு திருநாள் வாழ்த்துகளும் இறை ஆசிரும்.***

அன்புடன்

அருள்பணி. ***F.J.X. யூக்கரிஸ்ட்***

## FROM THE PARISH PRIEST

**Dear Parishioners,**

- ❖ Almost one quarter of the year is passing and amidst the work schedule, we may have failed to realize this. Also, in the New Liturgical Year, we have celebrated the first Special Season of Christmastide, which began with Advent which is the Season of preparation for the celebration of the BIRTH OF OUR LORD JESUS. The Solemnities of the Holy Family, Epiphany and the Baptism of Our Lord was the climax of the BEGINNING OF THE HISTORY OF SALVATION, in the New Testament.

- ❖ Now, after a small break of a month, we enter into the second and the final part of the History of Salvation which starts with the Season of LENT. 40 days of Lent, through 7 days of the Holy Week and we will reach the RESURRECTION.

- ❖ Season of Lent invites each one of us to FAST, to PRAY and to LOVE which is Charity towards our brethren in need.

- ❖ We, Christians, pray as Community and in Community. The first and the best community prayer is celebrating and participating in the HOLY MASS. But the Lord invites us on the very first day of Lent, on Ash Wednesday, to pray in secret and in silence - in other words invitation to the Inner Journey, which will lead, shape, and assist us to grow in SPIRITUALITY.

- ❖ FASTING meets a lot of fuss and mess about it. What and when to eat. The Lord clarifies that what we eat does not defile us but what comes out of a person - evil thoughts, sexual immorality, ....... foolishness (Mark 7: 14-23). Let's fast to what comes out of us as our thoughts, words and deeds.

- ❖ Fasting from the luxuries and unnecessaries, and what we save from them ought to be shared with those who are in need, to fulfill the Fasting and Prayer.

- ❖ Parish Annual Feast, from the 6th to the 15th of January were days of Grace for those who prepared themselves well. Let us similarly prepare ourselves through the Word of God, Stations of the Cross and the Sacrament of Reconciliation to enjoy the Peace of God.




***Happy Easter and God bless us, all.***

Yours in our Lord

***Fr. F.J.X. Eucharist.***

## கடந்த மாதங்களில் நடந்த நிகழ்வுகள்

1. **02.11.2022** இறந்த அனைத்து நம்பிக்கையாளரது நினைவு நாளில் காலை 6.00 மணிக்கு ஆங்கிலத்திலும் 7.00மணிக்கு தமிழிலும் மாலை 6.00 மணிக்கு தமிழிலும் திருப்பலிகள் நடைபெற்றது இத்திருப்பலிகளில், இறந்த யாருடைய பெயரும் குறிப்பிடப்படாமல் இறந்த அனைவருக்காகவும் பொதுவாக திருப்பலிகள் அர்ப்பணிக்கப்பட்டது.

2. **07.11.2022** தொடங்கி 26.11.2022 வரை முன்னரே பங்கு செய்தி மடலில் அறிவித்தபடி அன்பியங்களில் இறந்த நம்பிக்கையாளர்களுக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அப்போது பெறப்பட்ட காணிக்கையான ரூபாய் 33775 ஏழை மாணவர் கல்வி உதவிக்கான நிதியில் சேர்க்கப்பட்டது.

   பல அன்பியங்களில் பங்கேற்ற அன்பிய மக்கள் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. சில அன்பியங்களில் உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்பட்டது, அன்பிய திருப்பலிக்கான பொருளை இழந்தது.

3. **15.12.2022** அன்று தொடங்கி, கிறிஸ்து பிறப்பு விழாவுக்கான தயாரிப்பு தியானம், மூன்று நாட்களுக்கு நடத்தப்பட்டது. தியானத்தின்போது ஒப்புரவு அருட்சாதனமும் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது.

4. **29.12.2022** அன்று பங்கிலுள்ள அன்பியங்களின் சங்கமமாக, குடும்ப தின விழா சிறப்பிக்கப்பட்டது.

5. **06.01.2023** தொடங்கி **15.01.2023** ஆம் நாள் வரை, பங்கின் ஆண்டு திருவிழா நவநாள் தயாரிப்போடு தொடங்கி நடத்தப்பட்டது. திருவிழாவின் நிறைவு நாளன்று பிள்ளைகளுக்கு புது நன்மை வழங்கப்பட்டது .

6. **15.012023** அன்று பொங்கல் விழாவினை சிறப்பிக்கும் வண்ணமாக நடைபெற்ற கலை நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை பங்கின் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




## இம்மாத இறைவாக்கு

**“மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்.”** ( மத்தேயு 6:16)

**“And when you fast, do not look dismal, like the hypocrites.”** **(Matthew 6:16)**

## வரவு

| அன்பியம் | November | December | January |
|---|---|---|---|
| புனித அருளானந்தர் | 1,400 | 4,800 | 12,700 |
| தூய ஆவியார் | 920 | 2,000 | 14,500 |
| புனித தோமினிக் சாவியோ | 1,200 | 1,400 | 6,500 |
| புனித மத்தேயு | 1,500 | 3,850 | 18,800 |
| புனித குழந்தை தெரேசா | 500 | 1,800 | 5,000 |
| புனித லூக்கா | 1,500 | 6,300 | 23,000 |
| புனித அந்தோணியார் | 1,500 | 3,350 | 16,500 |
| புனித யோவான் | 715 | ——— | 6,600 |
| புனித இஞ்ஞாசியார் | 1,300 | 2,300 | 6,000 |
| சகாய மாதா | 900 | 2,000 | 11,000 |
| புனித பவுல் | 1,400 | 5,100 | 22,500 |
| புனித அன்னம்மாள் | 500 | ——— | 3,200 |
| ஆரோக்கிய மாதா | 1,900 | ——— | 11,000 |
| புனித சிசிலி | 1,200 | 4,470 | 27,500 |
| புனித யூதா ததேயு | 1,700 | 2,000 | 18,800 |
| புனித இறை இரக்கம் | 4,500 | 6,350 | 20,500 |
| புனித பேதுரு (இராயப்பர்) | 1,700 | 6,750 | 16,000 |
| புனித தேவ சகாயம் | 1,700 | 5,571 | 21,000 |
| புனித பிரான்சிஸ் சவேரியார் | 1,800 | 6,500 | 13,350 |
| புனித தோமையார் | 1,840 | 3,750 | 10,300 |
| புனித மாற்கு | 2,300 | 9,150 | 15,000 |
| பாத்திமா அன்னை | 1,000 | 3,051 | 11,801 |
| புனித சூசையப்பர் | 800 | ——- | 4,000 |
| **மொத்தம்** | **33,775** | **80,492** | **315,551** |

A. **புது நன்மை பிள்ளைகள்** - I 43,500
B. **பிற நன்கொடையாளர்கள்** - II 27,500
C. **CAROLS** (DECEMBER) III 80,492

**Grand Total** **4,67,043**

## செலவு

*Payments *

1. Christmas. - 1,14,000.00
2. Family day - 95,200.00
3. FEAST - 2,44,400.00
4. First Holy Communion - 38,000.00
5. Pongal - 35,800.00
6. Catechism Children's Day - 23,700.00
7. Miscellaneous - 23,700

Total - 5,79,800.00

பங்கு மக்கள்
மாத சந்தா செலுத்தவும்
நன்கொடைகளை வழங்கவும்
நமது பங்கு காலண்டரில்
தரப்பட்டுள்ள
கியூ ஆர் கோடை (QR Code)
பயன்படுத்தவும்.
பணம் செலுத்திய பின்
செலுத்திய விபரத்தை
**98403 77056** என்று
எண்ணுக்கு அனுப்பினால்
உங்களுக்கு ரசீது
அனுப்பி வைக்கப்படும்.

### நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு சந்திரகாந்த் | - | 2,000.00 |
| திரு வின்செண்ட் & திருமதி ஷீலா. | - | 3,000.00 |
| திரு போஸ்கோ, ஷீஜா, பியாங்கா | - | 15,000.00 |
| திருமதி ஆரோக்கியமேரி, திரு எட்வர்ட் டைசன் | - | 3,500.00 |
| திருமதி மரிய ரோஸ் பிரான்சிஸ் | - | 4,000.00 |
| **வங்கி வழியாக** | | |
| திரு மோகன் தாஸ் | - | 6,000.00 |
| திரு டென்னிஸ் | - | 10,000.00 |
| திரு ஆன்டனி டேவிஸ் (நெசப்பாக்கம்) | - | 15,000.00 |
| திரு ராகேஷ் , திருமதி மெர்லின் (நெசப்பாக்கம்) | - | 50,000.00 |

## எதிர்வரும் நாட்களில்....

### தவக்காலம் மற்றும் புனித வாரம்



22.02.2023 - **சாம்பல் புதன்**

24.02.2023 - தவக்காலத்தின் முதல் வெள்ளி.

26.02.2023 - தவக்காலத்தின் முதல் ஞாயிறு.

03.03.2023 - தவக்காலத்தின் இரண்டாவது வெள்ளி

05.03.2023 - தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு.

10.03.2023 - தவக்காலத்தின் மூன்றாவது வெள்ளி

12.03.2023 - தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு.

17.03.2023 - தவக்காலத்தின் நான்காவது வெள்ளி.

19.03.2023 - தவக்காலத்தின் நான்காவது ஞாயிறு.

**20.03.2023** - **புனித யோசேப்பு, புனித கன்னி மரியாவின் கணவர் - பெருவிழா.**
*திங்கள்*

24.03.2023 - தவக்காலத்தின் ஐந்தாவது வெள்ளி.

**25.03.2023 - ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு - பெருவிழா**
*சனி*

26.03.2023 - தவக்காலத்தின் ஐந்தாவது ஞாயிறு

31.03.2023 - தவக்காலத்தின் ஆறாவது வெள்ளி.

**02.04.2023 - ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு**

**06.04.2023 - பெரிய வியாழன்**

**07.04.2023 - ஆண்டவரின் பாடுகளின் வெள்ளி**

**09.04.2023 - ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு.**

### தவக்காலத்தில் சிலுவைப்பாதையை வழிநடத்துபவர்கள்.



**24.02.2023** - அருள்தந்தை **ரெய்மண்ட்**

**03.03.2023** - அருள்தந்தை **பென்சன்**

**10.03.2023** - திரு. **மரிய ஆனந்த்**



**17.03.2023** - அருள்தந்தை **ஆச்சரியம்**

**24.03.2023** - திரு. **சகாயராஜ்**

**31.03.2024** - அருள்தந்தை **பீட்டர் அடைக்கலம்**

# In the forthcoming Months...
## Season of LENT & the Holy Week

**22.02.2023 - ASH WEDNESDAY**

26.02.2023 - First Sunday in Lent.

01.03.2023 - Wednesday, Stations of the Cross and Holy Mass - **Fr. Antony Doss, sdm**

05.03.2023 - Second Sunday in Lent

08.03.2023 - Wednesday, Stations of the Cross and Holy Mass - **Fr. Sagayaraj, sdb**

12.03.2023 - Third Sunday in Lent

15.03.2023 - Wednesday, Stations of the Cross and Holy Mass

19.03.2023 - Fourth Sunday in Lent.

**20.03.2023 - St. Joseph, Husband of Mary - Solemnity**
**Monday**

22.03.2023 - Wednesday, Stations of the Cross and Holy Mass.

**25.03.2023 - The Annunciation of the Birth of Our Lord - Solemnity.**
**Saturday**

26.03.2023 - Fifth Sunday in Lent.


29.03.2023 - Wednesday, Stations of the Cross and Holy Mass

**02.04.2023 - PALM SUNDAY of the PASSION OF OUR LORD.**

**06.04.2023 - MAUNDY THURSDAY.**

**07.04.2023 - GOOD FRIDAY OF THE PASSION OF THE LORD.**

**09.04.2023 - SOLEMNITY OF THE RESSURECTION OF THE LORD**



# தவக்கால நிகழ்வுகள்

| | |
|---|---|
| 22.02.2023 | **சாம்பல் புதன் - Ash Wednesday** <br>6.15 am. **Mass in English**<br>காலை 7.30 தமிழில் திருப்பலி<br>மாலை 6.30 தமிழில் திருப்பலி |
| 02.04.2023  | **பாடுகளின் குருத்து ஞாயிறு - Passion Sunday**<br>காலை 7.00 **குருத்தோலை பவனி, தமிழில் திருப்பலி**<br>09.30 am. - **Blessing of the Palms** - Holy Mass in English<br>மாலை 6.30 தமிழில் திருப்பலி |
| 06.04.2023  | **பெரிய வியாழன் - Holy Thursday**<br>5.00 pm. - Celebration of Lord's Supper - Washing of the Feet<br>மாலை 6.30 ஆண்டவரின் இறுதி உணவு திருப்பலி<br>பாதம் கழுவும் சடங்கு - நற்கருணை பவனி |
| 07.04.2023 | **புனித வெள்ளி - Good Friday** <br>01.00 pm. - Adoration<br>02.00 pm. - Stations of the Cross<br>02.30 pm. - Veneration of the Cross<br>மாலை 6.00 **சிலுவைப்பாதை - திருவிருந்து**<br>**திருச்சிலுவை ஆராதனை** |
| 08.04.2023 | **புனித சனிக்கிழமை - Holy Saturday**<br>08.30 pm. - Easter Vigil in English<br>இரவு 11.00 - **பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி** |
| 09.04.2023 | **உயிர்ப்பு ஞாயிறு - Easter Sunday**  <br>07.00 pm. - Easter Mass in English<br>காலை 8.30 **உயிர்ப்பு பெருவிழா திருப்பலி**<br>"மாலை திருப்பலி இல்லை"<br>No Mass in the Evening |

## நற்கருணை ஆராதனை

# 06.04.2023 பெரிய வியாழன்



**08.30 pm** : பொது ஆராதனை

**09.00 pm** : இளைஞர், பாடகர் குழுக்கள்

**10.00 pm** : தூய தோமையார், யோசேப்பு அன்பியங்கள்

# 07.04.2023 பெரிய வெள்ளி

**06.00 am** : தூய யூதா ததேயூ, தோமினிக் சாவியோ, தூய ஆவி அன்பியங்கள்

**07.00 am** : தூய சவேரியார், அன்னம்மாள் அன்பியங்கள்

**08.00 am** : தூய மாற்கு, யோவான் அன்பியங்கள்

**09.00 am** : மறைக்கல்வி மாணவ - மாணவிகள், பீடச்சிறுமிகள், சிறுவர்கள்

**10.00 am** : தூய பேதுரு, தேவசகாயம், சிசிலியா அன்பியங்கள்

**11.00 am** : தூய அந்தோணியார், லூக்கா, இஞ்ஞாசியார் அன்பியங்கள்

**12.00 pm** : தூய குழந்தை தெரேசாள், அருளானந்தர், ஆரோக்கிய அன்னை அன்பியங்கள்

**01.00 pm** : இரக்கத்தின் ஆண்டவர், மத்தேயு அன்பியங்கள்

**02.00 pm** : ஆங்கிலத்தில் ஆராதனை - **Adoration in English**

**03.00 pm** : சகாய அன்னை, பாத்திமா அன்னை, தூய பவுல் அன்பியங்கள்

**04.00 pm** : பக்த சபைகள்

**05.00 pm** : பொது ஆராதனை

**06.00 pm** : திருச்சிலுவை வழிபாடு, நற்கருணை திருவிருந்து, திருச்சிலுவை ஆராதனை

**புனித வெள்ளியன்று**

திருச்சிலுவை ஆராதனையின்போது பெறப்படும் காணிக்கை புனித பூமிக்கு பாராமரிப்பிற்காக அனுப்பப்படும்.

மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் (மாற்க் 1:15)

# தவக்கால தியானம்



**30.03.2023,**

**வியாழக்கிழமை முதல்**

**02.04.2023,**

**ஞாயிற்றுக்கிழமை வரை.**

நேரம் :

**மாலை 6.00 மணி : செபமாலை**

**மாலை 6.30 முதல் 8.30 மணி : திருப்பலி, மறையுரை**

தியான மறையுரை வழங்குபவர்

அருள்தந்தை **அன்பு ஆனந்தராஜ்**

இரட்சகர் சபை

அஞ்சுக்கோட்டை, இராமநாதபுரம்



# தவக்கால திருப்பயணம்

**செல்லும் இடம் :**
**வந்தவாசி, சேத்துப்பட்டு**
**தூய லூர்து அன்னை திருத்தலம்.**

நாள் : **11.03.2023**
(மார்ச் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை)

**கட்டணம் : நபர் ஒருவருக்கு ரூபாய் 500 /-**

(மதிய உணவு உள்பட)

# பரிகார நடைப்பயணம்

தவக்காலத்தில் நம் தவறுகளுக்கு பரிகாரமாக
தோமையார் மலை நோக்கி
பரிகார நடைபயணம்



நாள் : **26.03.2023**
நேரம் : **பிற்பகல் 3.00 மணி**

# Holy Week Liturgy in Englsh

will be presided over and animated by

# Rev. Fr. Poondy Rajan. sj

(Loyola College, chennai 600 034)




# தமிழில் புனித வார வழிபாடுகளை

தலைமையேற்று நடத்துபவர்

## அருள்தந்தை A. பவுல்ராஜ்

(கப்பூச்சின் சபை)

(இயக்குநர், உதயம் சமூக சேவை மய்யம், திருச்சி

நம்முடைய மீட்புக்காக இரத்தம் சிந்திய
இயேசுவின் பாடுகளின் தொடக்கநாள்
பாடுகளின் குருத்து ஞாயிறன்று

# இரத்த தான முகாம்

நமது பங்கின் இளைஞர் குழுவினர்,
வின்சென்ட் தே பவுல் சபையினர் மற்றும்
கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி
இணைந்து நடத்தும் இரத்ததான முகாமில்
பங்கேற்று இரத்த தானம் செய்வோம்.

குருதி தருவோர், உயிர்தருவோர் !

**Donate Blood, Save Lives!**

---

## குடும்பநல பணிக்குழு

### திருமண முன்தயாரிப்பு வகுப்புகள் - 2023
### Marriage Preparation Course - 2023

| Month | Tamil | English |
|---|---|---|
| **March** | **04th & 05th** | **18th & 19th** |
| **April** | **01st & 02nd** | |
| **May** | **06th & 07th** | |

*மேலே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மட்டும் திருமணமுன் தயாரிப்பு பயிற்சியானது நடைபெறும். இந்தப் பயிற்சிக்கான பதிவினை mmfamilycommission.com என்ற இணையதளத்தின் மூலமாகவும் பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சி நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.*

*பதிவுக் கட்டணம் :* **Rs. 500/- (per head)**

*தொடர்புக்கு : 72001 24168 / 044 - 2493 4853*

# நிம்மதி இழப்பது எதனால்?..

தன்னிடம் இருப்பதே போதும் என்ற எண்ணம் வராதவரை, நாம் தொடர்ந்து ஏதோ ஒன்றிற்காக அலைந்து கொண்டேதான் இருக்கின்றோம்.

எத்தனை கிடைத்தாலும் மனம் திருப்தி,, நிம்மதி அடைவது இல்லை..

நம்மிடம் இருப்பதை வைத்து சரியான முறையில் பயன்படுத்த தவறும்போது, நிம்மதியை இழக்கக்கூடிய சூழல்கள் ஏற்படுகிறது..

இருப்பதை கொண்டு திருப்தி காணும் உள்ளம் இல்லையெனில் கோடி கோடியாக கொட்டினாலும் போதாது தான்.!

ஒரு அறிஞரிடம் பணக்காரர் வந்து, அய்யா என்னிடம் நிறைய செல்வமிருந்தும் மனதில் கொஞ்சம்கூட நிம்மதியே இல்லை... என்ன காரணம் என்பது புரிய வில்லை? என்று கேட்டார்.

அதற்கு அந்த அறிஞர் பதில் சொல்லவில்லை. அங்கே அருகில் விளையாடிக் கொண்டு இருந்த குழந்தை ஒன்றை அருகே அழைத்தார்.

அதன் கையில் ஒரு மாம்பழத்தை கொடுத்தார்.

குழந்தை அதை தன்னுடைய ஒரு கையால் வாங்கிக் கொண்டது.

அடுத்து ஒரு பழத்தை கொடுத்தார். அதையும் இன்னொரு கையால் வாங்கிக் கொண்டது. மீண்டும் ஒரு பழத்தை கொடுத்தார்.

தன்னுடைய ஒருகையால் இரு பழங்களையும் மார்போடு அணைத்துக் கொண்டு மூன்றாவது பழத்தையும் பெற முயற்சித்தது.

ஆனால் ஒரு பழம் நழுவி கிழே விழுந்தது. அதைக் கண்டு அந்த குழந்தை அழுதது.

இதை கவனித்துக் கொண்டு இருந்த அந்த பணக்காரரிடம் அந்த அறிஞர்,

"இந்த குழந்தையை பார்த்தாயா? இரண்டு பழம் போதும் என்று நினைத்திருந்தால் இந்த நிலை அந்தக் குழந்தைக்கு வந்திருக்குமா?" என்றார்.

அதே போன்றுதான் "போதும்" என்ற திருப்தி ஏற்பட்டு விட்டால் பிரச்னை வாரது.நிம்மதி கிடைக்கும் தனக்கு ஏன் வாழ்க்கையில் நிம்மதி இல்லை என்ற விவரம் இப்போது அந்த பணக்காரருக்கு புரிந்து விட்டது.

ஆம்.,நண்பர்களே..

தங்களிடம் உள்ளதை வைத்து வாழக் கற்றுக் கொள்ளுங்கள்..

அது, வாழ்க்கையில் மன நிம்மதியையும், அமைதியையும் ஏற்படுத்தும்.

நிறைவான மனமே ஒருவருக்கு கிடைக்கும் மிகப் பெரிய வரம்.

இறைவன் கொடுப்பதை திருப்தியுடனும் மகிழ்வுடனும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

இல்லாததை நினைத்து ஏங்காமல்

இருக்கும் அனைத்திற்கும் நன்றி சொல்லுங்கள்.

ஒவ்வொரு நிமிடமும் அனுபவிக்கும் அனைத்திற்கும் நன்றியோடு இருங்கள்.

நீங்கள் அனுபவிக்கும் எல்லாமும் எல்லோருக்கும் இங்கு கிடைப்பதில்லை.

சில நேரங்களில் இல்லாததை நினைத்து, இருப்பதை அனுபவிக்க மறந்து விடுகிறோம்.

திருப்தியுடன் ஒவ்வொரு நாளையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

திருப்தியுடன் ஒவ்வொரு நாளையும் நிறைவு செய்யுங்கள்.

அதன் பிறகு பாருங்கள் உங்களைப் போல அழகான வாழ்க்கையை வாழ இந்த உலகில் யாராலும் முடியாது.

திருப்தி என்ற ஒன்று மனதில் வந்து விட்டால் போதும்.

வாழ்க்கை அற்புதமானதாகும். அழகானதாகும்.

அதை அனுபவித்து வாழ்ந்து விடுங்கள்.

இறைவன் அருளால் உங்கள் வாழ்க்கை மென்மேலும் சிறக்கட்டும். செழிக்கட்டும்.

வள்ளலார் கூறிய வாழ்க்கை போதனை

தேவைக்கு செலவிடு. இயன்ற வரை பிறருக்கு பொருளுதவி செய்.

ஜீவகாருண்யத்தை கடைபிடி. இனி அநேக ஆண்டுகள் வாழப் போவதில்லை.

உயிர் போகும் போது,எதுவும் கொண்டு செல்ல போவதுமில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை. மடிந்த பின் என்ன நடக்கும் என்று குழம்பாதே.

உயிர் பிரிய தான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம், எல்லாமே பிரிந்து விடும்.

உயிர் உள்ள வரை, ஆரோக்கியமாக இரு. உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே.

உன் குழந்தைகளை பேணு. அவர்களிடம் அன்பாய் இரு. அவ்வப்போது பரிசுகள் அளி. அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே. அடிமையாகவும் ஆகாதே.

பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட, பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ, சூழ்நிலை கட்டாயத்தாலோ, உன்னை கவனிக்க இயலாமல் தவிக்கலாம். புரிந்து கொள்!

அதைப் போல, பெற்றோரை மதிக்காத குழந்தைகள், உன் சொத்து பங்கீட்டுக்கு சண்டை போடலாம். உன் சொத்தை தான் அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென, வேண்டிக் கொள்ளலாம். பொறுத்துக் கொள். அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்கடமை மற்றும் அன்பை அறியார்.

"அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி" என அறிந்து கொள். இருக்கும் போதே குழந்தைகளுக்கு கொடு. ஆனால், நிலைமையை அறிந்து, அளவோடு கொடு. எல்லாவற்றையும் தந்து விட்டு, பின் கை ஏந்தாதே.

"எல்லாமே நான் இறந்த பிறகு தான்" என, உயில் எழுதி வைத்திராதே. நீ எப்போது இறப்பாய் என எதிர் பார்த்து காத்திருப்பர். எனவே, கொடுப்பதை நினைப்பதை மட்டும் முதலில் கொடுத்து விடுமேலும் தர வேண்டியதை, பிறகு கொடு.

மாற்ற முடியாததை, மாற்ற முனையாதே. மற்றவர் குடும்ப நிலை கண்டு, பொறாமையால் வதங்காதே. அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு.

பிறரிடம் உள்ள நற்குணங்களை கண்டு பாராட்டு.

நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து, உடல் நலம் பேணி, இறை பக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உறவாடி, மன நிறைவோடு வாழ். இன்னும் இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள், சுலபமாக ஓடி விடும்!

வாழ்வை கண்டு களி!

ரசனையோடு வாழ்!

வாழ்க்கை

வாழ்வதற்கே!

**நான்கு நபர்களை புறக்கணி!**

மடையன்,

சுயநலக்காரன்,

முட்டாள்,

ஓய்வாக இருப்பவன்.

**நான்கு நபர்களுடன் கடினமாக நடக்காதே!**

அனாதை,

ஏழை,

முதியவர்,

நோயாளி.

**நான்கு நபர்களை வெறுக்காதே!**

தந்தை,

தாய்,

சகோதரன்,

சகோதரி.

**நான்கு விசயங்களை குறை!**

உணவு,

தூக்கம்,

சோம்பல்,

பேச்சு.

**நான்கு விசயங்களை தூக்கிப் போடு!**

துக்கம்,

கவலை,

இயலாமை,

கஞ்சத்தனம்.

**நான்கு விசயங்களை பழகு!**


தியானம்,

நூல் வாசிப்பு,

உடற்பயிற்சி,

சேவை செய்தல்.

**A beautiful poem by Nobel laureate Sir Robindra Nath Tagore.**



When I'm dead.
Your tears will flow
But I won't know
Cry with me now instead.

You will send flowers,
But I won't see
Send them now instead

You'll say words of praise
But I won't hear.
Praise me now instead

You'll forgive my faults,
But I won't know.....
So forget them now instead.

You'll miss me then,
But I won't feel.
Meet me now, instead.

You'll wish you could have
Spent more time with me,
Spend it now instead

When you hear I'm gone, you'll find your way to my house to pay condolence but we haven't even spoken in years.
Look, listen and reply me now.

Spend time with every person around you, and help them with whatever you can to make them happy, your families, friends and acquaintances.
Make them feel Special because you never know when time will take them away from you forever.

Alone I can 'Say' but together we can 'Talk'.
Alone I can 'Enjoy' but together we can 'Celebrate'
Alone I can 'Smile' but together we can 'Laugh'

That's the BEAUTY of Human Relations.
We are nothing without each other
So Stay Connected!!

## எதிர்வருகின்ற ஞாயிறு திருப்பலிகளை 'சிறப்பித்த அன்பியங்கள்'

**மார்ச் மாதம்**

5 ஆம் தேதி - புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம்
12 ஆம் தேதி - ஆரோக்கிய அன்னை அன்பியம்
19 ஆம் தேதி - புனித யோசேப்பு அன்பியம்
26 ஆம் தேதி - சகாய அன்னை அன்பியம்



**ஏப்ரல் மாதம்**

2 ஆம் தேதி - வழிபாட்டு குழுவினர்
9 ஆம் தேதி - வழிபாட்டு குழுவினர்
16 ஆம் தேதி - இறையிரக்க அன்பியம்
23 ஆம் தேதி - புனித தோமையார் அன்பியம்
30 ஆம் தேதி - புனித தேவ சகாயம் அன்பியம்


**மே மாதம்**

7 ஆம் தேதி - பாத்திமா அன்பியம்
14 ஆம் தேதி - இளைஞர் குழுவினர்
21 ஆம் தேதி - கிறிஸ்துவ வாழ்வுரிமை இயக்கம் மற்றும் கிறிஸ்துவ தொழிலாளர் இயக்கம்
28 ஆம் தேதி - தூய ஆவியார் அன்பியம்

**ஜூன் மாதம்**

4 ஆம் தேதி - மரியாயின் சேனை
11 ஆம் தேதி - புனித அந்தோணியார் அன்பியம்
18 ஆம் தேதி - புனித மாற்கு அன்பியம்
25 ஆம் தேதி - புனித வின்சென்ட் தே பவுல் & பொதுநிலையினர் பிரான்சிஸ்கன் சபையினர்.





அனைத்து நம்பிக்கையாளர் தினம்



இறந்த பாப்பரசருக்கு
அஞ்சலியும் திருப்பலியும்

# பங்கின் குடும்ப விழா























# பங்குத்திருவிழாவில்
# புதுநன்மை பெற்ற நம் பங்கு செல்வங்கள்

